முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம்,

திட்டக்குடி.

**OS.93/2012 PW: 2 12 .02.2024**

2024 ஆம் ஆண்டு பிப்ரவரி திங்கள் 12 ம் நாள் வாதி தரப்பு சாட்சியாகிய என்பவரின் வாக்குமூலம் 1873 ஆம் ஆண்டின் 10-வது விதியின் ஏற்பாட்டின்படி திருமதி.T.நித்யகலா, B.Com., B.L., ஆகிய என்னால் ஆணையிடப்பட்டு உறுதி கூறப்பட்டு சத்திய பிரமாணம் செய்யப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | திரு.சாமிதுரை | வயது | 67 |
| த/க. பெயர் | கருப்பன் | தொழில் | விவசாயம் |
| ஜாதி | | கிராமம் | மங்கலூர் |
| வட்டம் | | மாவட்டம் | |

**குறுக்கு விசாரணை** உங்கள் வழக்கில் பிரதிவாதிகளை தெரியுமா என்றால் தெரியும். சின்னா வின் பிள்ளைகள் தான் முத்துகருப்பனும், பழனிவேலும் ஆகும் என்றால் சரிதான். முத்துகருப்பன் மனைவி தான் விஜயா என்றால் சரிதான். நீங்கள் சாட்சியம் சொல்லும் சொத்து ஆதியில் யாருக்கு பாத்தியம் என்றால் பழனிவேலுக்கு பாத்தியம். ஆதியில் சின்னானுக்கு பாத்தியம் என்றால் சரிதான். சின்னான் இறந்து போனார், முத்து கருப்பன் இறந்து போனார் என்றால் சரிதான். முத்து கருப்பன் மனைவி விஜயா பாக வழக்கு போட்ட விபரம் தெரியுமா என்றால் தெரியாது. இந்த பாக வழக்கில் 30.04.2010 ல் முதல் தீர்ப்பாணை பிறப்பிக்கப்பட்டது என்றால் தெரியாது. வாதி எப்பொழுது கிரையம் வாஙங்கினார் என்றால் 20 வருடத்திற்கு மேலாகிறது. அந்த கிரையத்தில் நீங்கள் சாட்சி கையெழுத்து ஏதும் போட்டீர்களா என்றால் இல்லை. பத்திரம் பதிவு செய்த பத்திரமா என்றால் தெரியாது. பட்டா அவர் பெயரில் உள்ளது. அது பதிவு செய்யாத பத்திரம் என்பதாலும் வழக்கு நிலுவையில் கிரையம் வாங்கியது செல்லாது என்றால் சரியல்ல. நீங்கள் சந்தோஷ் உறவினர் என்பதால் பொய் சாட்சி சொல்லுகிறீர்கள் என்றால் சரியல்ல.

**Typed to my dictation in the open Court as per the statement of the witness, read over to the witness and admitted by him/her to be correct.**

**(Sd/Nithyakala)**
**Principal District Munsif,**
Tittagudi.